எமது அடையாளத்தை அழித்து

# இந்தியை முன்னிறுத்தும் பா.ஜ.க. முயற்சி உறுதியோடு எதிர்க்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, ஆக.12–

எமது அடையாளத்தை அழித்து இந்தியை முன்னிறுத்தும் பா.ஜ.க.வின் முயற்சிகள் உறுதியோடு எதிர்க்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

காலனியாக்கத்தின் தளைகளில் இருந்து விடுவிக்கிறோம் என்ற பெயரில் செய்யப்படும் மறுகாலனியாக்கம்.

பாரதீய நியாய சன்ஹிதா, பாரதீய நாகரிக் சன்ஹிதா, பாரதீய சாக்ஷ்ய சன்ஹிதா என்ற பெயர்களில் ஒன்றிய பா.ஜ.க அரசு ஒட்டுமொத்தமாக மாற்றிக் கொண்டுவந்துள்ள சட்ட வரைவுகளில் மொழியாதிக்கத்தின் முடைநாற்றம் எடுக்கின்றது.

இது இந்தியாவின் பன்முகத்தன்மையைச் சிதைக்கும் அராஜக முயற்சி ஆகும். இந்திய ஒற்றுமையின் அடிப்படையையே இது அவமதிக்கிறது. பாரதீய ஜனதா கட்சிக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இனித் 'தமிழ்' என்று உச்சரிக்கக் கூட தார்மீக உரிமை இல்லை.

வரலாற்றில் இப்படி எத்தனையோ அடக்குமுறைகளால் புடம் போடப்பட்டு, அடக்குமுறைகளை எதிர்ப்பதில் முன்கள வீரர்களாக நிற்பவைதான் தமிழ்நாடும் தி.மு.கழகமும். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள், எமது மொழி அடையாளத்தைக் காப்பது என இந்தித் திணிப்பின் கொடும் புயலை எதிர்கொண்டவர்கள் நாங்கள். மீண்டும் அசைக்கமுடியாத உறுதியுடன் அதனை எதிர்கொள்வோம்.

இந்தி காலனியாக்கத்துக்கு எதிரான தீ மீண்டும் ஒருமுறை பரவுகிறது. எமது அடையாளத்தை அழித்து இந்தியை முன்னிறுத்தும் பா.ஜ.க.வின் முயற்சிகள் உறுதியோடு எதிர்க்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு

# மோடி வந்தால் என்ன ஆகிவிடும்?

## மல்லிகார்ஜுன் கார்கே பேச்சு!



புதுடெல்லி, ஆக. 12-

மணிப்பூர் குறித்து பேச மாநிலங்களவைக்கு பிரதமர் வர வேண்டும். அவர் ஒன்றும் கடவுள் இல்லை என மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்தார். மணிப்பூர் கலவரம் தொடர்பாக,விதி எண் 267ன் கீழ் மாநிலங்களவையில் விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.அந்த விதிபடி பிரதமர் மோடி அவைக்கு வந்து,பதில் அளிக்க வேண்டும். ஆனால் இது குறித்து விதி எண் 176ன் கீழ் குறுகிய விவாதம் நடத்த தயார் என ஒன்றிய அரசு அறிவித்தது. இதில் வாக்கெடுப்போ அல்லது விவாதத்துக்கு அமைச்சர் யாராவது பதில் அளிப்பதற்கான அத்தியாவசியம் ஏற்படாது.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை மாநிலங்களவையில் எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுந்து "விதி எண் 167ன் கீழ் பிரதமர் முன்னிலையில் மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதம் நடத்த வேண்டும்" என்றார். அதற்கு ஆளும் கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதற்கு மல்லிகார்ஜுன கார்கே, "பிரதமர் மோடி அவைக்கு வந்தால் என்ன ஆகிவிடும். அவர் ஒன்றும் கடவுள் இல்லை" என்றார். இதையடுத்து ஆளும் கட்சி எம்.பி.க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவையை மதியம் 2 மணி வரை மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கர் ஒத்திவைத்தார்.

மதியம் 2 மணிக்கு அவை மீண்டும் கூடிய போது, "வேறு ஒரு விதியின் கீழ் இந்த விவகாரம் குறித்து பேசுவதற்கு அவையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த ஜெகதீப் தன்கர் முயற்சித்தார். ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மாறி மாறி கருத்துகளை தெரிவித்ததால் எந்த ஒரு தீர்வும் ஏற்படவில்லை. அதன் பிறகு மிசோரத்தைச் சேர்ந்த ஒரு எம்.பி. எழுந்து,"பழங்குடியினர் மியான்மரில் இருந்து வரவில்லை என்றும் பிரிட்டிஷார் வருவதற்கு முன்னரே தான் உட்பட பழங்குடியினர் இந்தியாவில் வசித்து வருகின்றனர்" என தெரிவித்தார்.

ஆனால் அவர் பேசுவதற்கு அவை தலைவர் அனுமதி மறுத்தார். அவருக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவளித்தனர். சிலர் அவையின் மையப்பகுதியை நோக்கி ஓடி வந்தனர். இதனால் அமளி ஏற்பட்டது. இந்த சமயத்தில், பார்மஸிண(திருத்த) மசோதா 2023 அவையில் கொண்டு வரப்பட்டு அமளிக்கிடையே நிறை வேற்றப்பட்டது. எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்திவைத்து ஜெகதீப் தன்கர் உத்தரவிட்டார்.

எதிர்க்கட்சிகள் பெயர் சூட்டிய

# இந்தியா கூட்டணிக்கு எதிரான வழக்கு தள்ளுபடி!

## விளம்பரத்துக்காக வழக்குத் தொடுப்பதா என உச்சநீதி மன்றம் கண்டனம்!

புதுடெல்லி,ஆக.12-

இந்தியா கூட்டணி என எதிர்கட்சிகள் அணிக்கு பெயர் வைத்ததை எதிர்த்து தாக்கல் செய்த பொதுநல மனு தள்ளுபடி செய்துள்ளது. விளம்பரத்துக்காக பொதுநல மனுவை தாக்கல் செய்துள்ளதாக உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.காங், திமுக, திரிணாமுல் காங் உள்ளிட்ட 26 காட்சிகள் கொண்ட கூட்டணிக்கு இந்திய தேசிய உள்ளடக்கிய வளர்ச்சிக்கான கூட்டணி என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்திய தேசிய வளர்ச்சிக்கான கூட்டணி என்பதன் சுருக்கமே (INDIA) இந்தியா என அழைக்கபடுகிறது. இந்தியா என்ற பெயரை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தியா கூட்டணி என எதிர்கட்சிகள் அணிக்கு பெயர் வைத்ததை எதிர்த்து தாக்கல் செய்த பொது நல மனு தள்ளுபடி செய்துள்ளனர்.

வரும் 2024ம் ஆண்டு மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பாஜகவுக்கு எதிராக வியூகம் அமைக்கவும், வலுவான முன்னணியை முன்வைக்கவும் பெங்களூருவில் கூடியுள்ள 26 எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு 'INDIA' (இந்தியா) என்ற பெயர் சூட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மக்களவைத் தேர்தலில் ஆளும் பாஜகவை தோற்கடிக்கும் நோக்கில் நிதிஷ் குமார், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின், மம்தா பானர்ஜி, கேஜ்ரிவால் உட்பட 26 எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பெங்களூருவில் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

இந்தக் கூட்டத்தில் கூட்டணிக்கு ஏற்கெனவே இருந்த யுபிஏ (UPA) 'ஐக்கிய முற்போக்குக் கூட்டணி' என்ற பெயருக்குப் பதிலாக புதிய பெயர்களை பரிந்துரைக்க இரவு விருந்தில் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி, இன்று நடந்த கூட்டத்தில் 4 புதிய பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டது. இந்த நிலையில் 26 எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு 'INDIA' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதன் விரிவாக்கம்: *I - Indian, N - National, D - Democratic, I - Inclusive, A - Alliance.* அதாவது, இந்திய தேசிய ஜனநாயக உள்ளடங்கிய கூட்டணி ஆகும்.

இந்நிலையில், கிரீஷ் பரத்வாஜ் என்பவர் டில்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதில், நாட்டின் பெயரை தங்கள் கூட்டணிக்கு வைத்து, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த எதிர்க் கட்சிகள் முயற்சிப்பதாக குற்றம் சாட்டியிருந்தார். எனவே, 'இந்தியா' என்ற பெயரை பயன்படுத்த இடைக்கால தடை விதிக்க வேண்டும் என, அந்த மனுவில் அவர் கோரியிருந்தார். மனுவை விசாரித்த டில்லி உயர் நீதிமன்றம், 'எதிர் தரப்பினர் பதிலை பெறாமல் இடைக்கால உத்தரவு எதையும் பிறப்பிக்க முடியாது' என, தெரிவித்தது.

இந்த மனுவுக்கு பதில் அளிக்கும்படி, கூட்டணியில் இடம் பெற்றுள்ள 26 அரசியல் கட்சிகள் மற்றும் ஒன்றிய அரசு, தேர்தல் கமிஷனுக்கு 'நோட்டீஸ்' அனுப்ப உத்தரவிட்டது. கிரீஷ் பரத்வாஜ் என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவை டெல்லி உயர்நீதிமன்றம் விசாரித்தது. அப்போது அரசியல் லாப நோக்கங்களுக்காகவும், அப்பாவி மக்களின் வாக்குகளை பெறும் நோக்கத்திற்காகவும், "இந்தியா" என்ற பெயரை கூட்டணிக்கு வைத்து எதிர்க்கட்சிகள் பயன்படுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டது. இது அரசியல் வன்முறைக்கு இட்டுச் செல்லும் என்றும், இந்தியா என்ற பெயரை பயன்படுத்துவதற்கு தடை விதிக்க வேண்டும் எனவும் வாதிடப்பட்டது. இந்நிலையில் பொது நல மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் நீதிபதி இந்தியா கூட்டணி என எதிர்கட்சிகள் அணிக்கு பெயர் வைத்ததை எதிர்த்து தாக்கல் செய்த பொது நல மனு தள்ளுபடி செய்துள்ளார்.

புதுக்கோட்டை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால்

# 1.87 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.181.40 கோடி மதிப்பில் இடுபொருள் மானியம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஆக 12-

கடந்தாண்டு வடகிழக்குப் பருவமழை போதிய அளவு பெய்யாததால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 1,87,275 விவசாயிகளுக்கு இடுபொருள் மானிய நிவாரண உதவியாக ரூ.181.40 கோடி வழங்கிட தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை சராசரி அளவை விட அதிகமாக பெய்திருந்தாலும் புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் குறைவான அளவே மழை பெய்து பயிர்கள் கருகின.

இதனால், 1.10.2022 முதல் 31.12.2022 வரையிலான 2022ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் முழுப் பருவத்திலும் போதிய மழையில்லாததால் பயிர்கள் கருகி, 33 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் பயிர் இழப்பு ஏற்பட்டதால், இம்மாவட்டங்களில் "மிதமான விவசாய வறட்சியை" (*Agricultural Drought of moderate nature*) அறிவித்திட அரசு ஆய்வு செய்து, புதுக்கோட்டை மாவட்டம் - ஆவுடையார்கோயில் மற்றும் மணமேல்குடி, சிவகங்கை மாவட்டம் - இளையான்குடி, காளையார்கோவில், தேவக்கோட்டை, மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம் - போகலூர், கடலாடி, கமுதி, மண்டபம், முதுகுளத்தூர், நயினார்கோயில், பரமக்குடி, ஆ.எஸ். மங்கலம், இராமநாதபுரம், திருப்புல்லானி, திருவாடானை, தென்காசி மாவட்டம் - ஆலங்குளம், கடையநல்லூர், கீழப்பாவூர், மேலநீலிதநல்லூர், சங்கரன் கோவில், தூத்துக்குடி மாவட்டம் - ஆழ்வார்திருநகரி, விருதுநகர் மாவட்டம் - நரிக்குடி மற்றும் திருச்சுழி ஆகிய 25 வட்டாரங்களைச் சேர்ந்த 1,42,832.6787 எக்டர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டதாக அறிவித்துள்ளது.

அதன்படி, கடந்தாண்டு வடகிழக்குப் பருவமழை போதிய அளவு பெய்யாததால் பாதிப்புக்குள்ளான புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 6,746 விவசாயிகளுக்கு 6,62,60,714 ரூபாயும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,34,305 விவசாயிகளுக்கு 132,70,95,775 ரூபாயும், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 25,847 விவசாயிகளுக்கு 25,76,85,982 ரூபாயும், தென்காசி மாவட்டத்தில் 17,096 விவசாயிகளுக்கு 13,85,38,930 ரூபாயும், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 61 விவசாயிகளுக்கு 4,43,273 ரூபாயும், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த 3,220 விவசாயிகளுக்கு 2,39,85,964 ரூபாயும், என மொத்தம் ஆறு மாவட்டங்களில் 25 வட்டாரங்களில் உள்ள 1,87,275 விவசாயிகளுக்கு ரூ.181.40 கோடி இடுபொருள் மானிய நிவாரண உதவி வழங்கிட தமிழ்நாடு அரசால் 09.08.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு

# தமிழ்நாட்டுக்கு காவிரிநீர் திறந்து விட வேண்டும்!

## காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு!

புதுடெல்லி,ஆக.12-

காவிரியில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி நதிநீர் பங்கீட்டில் உள்ள பிரச்சினைகளை களைவதற்காக சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் அமைக்கப்பட்டதில் இருந்து இது வரை 21 கூட்டங்கள் நடந்துள்ளன. இந்த நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் 22வது கூட்டம் தலைநகர் டெல்லியில் நேற்று நடைபெற்றது.

ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, கேரளாவைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் தமிழக அரசு சார்பில், தமிழகத்திற்கு 38 டிஎம்சி தண்ணீரை உடனடியாக திறக்க வேண்டும் வலியுறுத்தப்பட்டது. தமிழகத்திற்குரிய தண்ணீரை கர்நாடகா தரமறுத்ததையடுத்து தமிழக நீர்வளத்துறை செயலாளர் சந்தீப் சக்சேனா தலைமையிலான அதிகாரிகள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இந்த நிலையில், காவிரியில் இருந்து தமிழகத்திற்கான தண்ணீரை திறந்து விட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. தண்ணீர் திறந்துவிட கர்நாடகா மறுத்ததால் கூட்டத்திலிருந்து தமிழக அதிகாரிகள் பாதியில் வெளியேறிய நிலையில் காவிரி மேலாண்மை ஆணையம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

சமூக நீதிக்கான அரசு இது! பாதிக்கப்பட்ட

# தம்பி சின்னதுரையின் கல்லூரிப் படிப்பு முழுச் செலவையும் ஏற்கிறேன்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உருக்கம்!



சென்னை,ஆக.12-

நாங்குனேரி சம்பவம் தொடர்பாக பேசியுள்ள பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அனைவரையும் அரவணைத்து செல்லுங்கள் வேற்றுமை உணர்வு வேண்டாம். சமூகநீதிக்கான அரசு இது! பாதிக்கப்பட்ட தம்பி சின்னதுரையின் கல்லூரி படிப்பிற்கான முழு செலவையும் அண்ணனாக நான் ஏற்றுக்கொள்கிறேன்! நாளைய தமிழ் சமூகத்தைப் படைக்கக் காத்திருக்கும் மாணவ மலர்களுக்கு அன்பான வேண்டுகோள் என வீடியோ மூலமாக மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் குறிப்பிட்டதாவது:-

"இந்த ஆண்டு வைக்கம் போராட்டம் 100 ஆண்டுகளைக் கடந்த ஆண்டு. தந்தை பெரியார் எதற்கெல்லாம் குரல் கொடுத்தார் என்பதை மாணவர்களுக்கு எடுத்து சொல்ல வேண்டும். பேச்சுபோட்டி, கட்டுரை போட்டி நடத்த வேண்டும் என முதல்வர் எங்கள் துறைக்கு உத்தரவிட்டுள்ளார். அந்த வகையில் உங்களிடம் நான் வைக்கும் வேண்டுகோள். மிகப்பெரிய ஆளுமைகள் நமக்கு நிறைய புத்திமதியை கூறியுள்ளனர். மனிதநேயம் என்றால் என்ன என்பது குறித்த அடிப்படை விஷயத்தை பல்வேறு விதங்களில் வலியுறுத்தியுள்ளனர். அதை கரோனா காலக்கட்டத்தில் தான் எல்லோரும் உணர்ந்தனர்.

இன்று உயர் கல்வி நிறுவனங்களில் பல மாணவர்கள் சேர்ந்துள்ளனர் என பெருமையாக பேசுகிறோம். மற்ற மாநிலங்கள் பொறாமைபடுகின்றனர்.

முதல்வரை பலரும் பாராட்டும் சூழலில், ஒரு நிகழ்வு நடந்துள்ளது. அது குறித்த விவரங்களை நான் சொல்ல விரும்பவில்லை.மாணவர்களாகிய நீங்கள் பள்ளிக்கூடத்துக்கு செல்லும்போது உங்கள் புத்தியை கூர்மைபடுத்த வேண்டும் என தான் ஆசைப்படுகிறோம்; கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்க வேண்டும் என நாங்கள் ஆசைப்படவில்லை. ஆனால், ஒரு சில சம்பவங்கள் எங்களை மிகவும் பாதிப்படையச் செய்கிறது. சோர்வடையச் செய்கிறது. காரணம் நாங்கள் மாணவர்களை அறிவுசார்ந்து முன்னேற்ற வேண்டும் என நினைக்கிறோம். ஆனால் ஒரே ஊர்காரராக இருந்தும் உங்களுக்குள்ளேயே இருக்கும் வேற்றுமை உணர்வை விதைக்கும் எந்த சக்தியாக இருந்தாலும் அவர்களை ஒடுக்க வேண்டும் என நினைக்கும் அரசாங்கம் இந்த அரசு. தவறு செய்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் அதே வேளையில், பாதிக்கப்பட்டுள்ள மாணவர், அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அவரின் தங்கையிடம் தொலைபேசியில் பேசினேன்.

என்னுடைய அந்த இரண்டு தம்பி, தங்கையை பாதுகாப்பான முறையில் ஒரு நல்ல கல்வி நிறுவனத்தில் சேர்த்து படிக்க வைப்பேன். பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக அது என் கடமை. அதேசமயம், தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து மாணவச் செல்வங்களும் எல்லோரையும் நம்முடையவர்களாக பாருங்கள். தயவு செய்து இதை மனதில் ஏற்றுக்கொண்டு, படிப்பில் கவனம் செலுத்துங்கள். நமக்குள் வேற்றுமை உணர்வை உருவாக்கும் வகையில் செயல்படாதீர்கள். உங்களுக்காக பல திட்டங்களை தீட்டும் முதல்வரை பெருமைபட செய்யுங்கள்.

ஓர் அமைச்சராக நான் பேசவில்லை. உங்களின் அண்ணனாக சொல்கிறேன். அனைவரையும் அரவணைத்து செல்லுங்கள். புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு அது தான் நாம் எடுக்கும் உறுதி மொழியாக இருக்கும். இது போன்ற சம்பவங்கள் இனியும் நடக்காத வண்ணம் நீங்கள் பார்த்துகொள்ளவேண்டும். மாற்றத்தை உருவாக்க வேண்டிய வயது பள்ளி மாணவர்களாகிய உங்களுடையது. முதல்வரின் கரத்தை வலுப்படுத்தும் சக்திகளாக நீங்கள் இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

இறுதியில், "எந்த மனிதனும் எனக்கு கீழானவன் இல்லை, அதேபோல எந்த மனிதனும் எனக்கு மேலானவன் இல்லை" என பெரியாரின் வாசகத்துடன் வீடியோ முடிகிறது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் 17 வயது மாணவர், அவரது 14 வயது தங்கையை 3 பேர் கும்பல் வீட்டுக்குள் அத்துமீறி புகுந்து அண்ணனையும், தங்கையையும் அரிவாளால் வெட்டி விட்டு தப்பியோடிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சாதியப் பின்னணி கொண்ட இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் கண்டனங்கள் வலுத்து வருவது குறிப்பிடத்தக்கது.







இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு 59க்குட்பட்ட சத்தியவாணி முத்து நகரில் நேற்று (11.08.2023) ஆறுகள், கால்வாய்கள் ஆகிய நீர்நிலைப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு கொசு வலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திருமதி க. சரஸ்வதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.




மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் ஏற்பாட்டில் புழல் காவாங்கரையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆயிரம் தாய்மார்களுக்கு சேலைகளை நலத்திட்ட உதவிகளாக வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மிசா.ப. மதிவாணன், ந. சந்திரபாபு, அறிவழகி பாலகிருஷ்ணன், ஆர்.டி மதன்குமார், வட்டச் செயலாளர்கள் வி. ஆர்.குப்பன், பி.எஸ்.சந்துரு, இ.கண்ணப்பன், டி.எழில்குமார், மு. விக்னேஸ்வரன், டி.ராஜாராம், அம்மு மூர்த்தி, மேக் ஷீலா உதயகுமார், சொ. சரவணன், டி.நெல்சன் ராஜ், க.சிவகுமார், க.ந.க. சைமன், வே. ரவி, எஸ்.முத்துவேல், ஆர். ராமச்சந்திரன், மு.உசேன் மொய்தின், பி. சுதாகர், தே. முத்து கிருஷ்ணன், அ.அப்துல் சமது, வி.ஹரி து.பார்பன் பார்த்திபன், எம். அமுதா மணிராஜ், எஸ். கலைச்செல்வி, ஆர்.சுதா, யுவராணி, மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.